DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | |
|---|---|
| Calendar | } CC.1394/2020 PW 10 (LW 10) |
| Preliminary Register | } |
| Name | } முருகேசன் |
| Father's name | } |
| Taluk | } |
| Village | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or
**Date 27.07.2023**

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் மாம்பள்ளியில் குடியிருந்து கொண்டு டிரைவராக தொழில் செய்து வருகிறேன். என்னுடைய மனைவி பெயர் கீதா. என் மனைவியை காணவில்லை என 07.02.2020 ம் தேதியன்று செட்டிபாளையம் காவல் நிலையம் சென்று வாய்மொழியாக புகார் சொன்னேன். என் மனைவி அப்போது சிவக்குமார் என்பவருடன் சென்றுவிட்டார். காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்து சமரசம் செய்து என் மனைவியை என்னுடன் அனுப்பி வைத்தார்கள். புகார் எதுவும் எழுத்துப்பூர்வமாக கொடுக்கவில்லை. தற்போது என் மனைவி என்னுடன் தான் இருந்து வருகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் மனைவியை காணவில்லை என்று மட்டும் தான் புகார் கொடுத்தேன். வேறு எதுவும் புகாரில் சொல்லவில்லை. என்னையும் என் மனைவியை மட்டும் தான் சமாதானம் பேசினார்களா என்றால் சிவக்குமாரையும் சமாதானம் செய்து அனுப்பிவைத்தார்கள். சிவக்குமார் மீது தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை. புகார் கொடுத்ததைப்பின்னிட்டு தற்போது வரை என் மனைவி என்னுடன் தான் வாழ்ந்து வருகிறார். எனக்கும் என் மனைவிக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றால் சரிதான். அதன் காரணமாகத்தான் என் மனைவி பிரிந்து சென்றாரா என்றால் என்ன காரணத்திற்காக சென்றார் என்று தெரியவில்லை. வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். என்னை போலீசார் 07.02.2020 ம் தேதியன்று விசாரித்தார்கள். அதன் பிறகு என்னைப்போலீசார் விசாரிக்கவில்லை. நீதிமன்றத்திற்கு வரச்சொன்னார்கள். என்னை

போலீசார் விசாரிக்கவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மகளிர் காவல் நிலையத்தில் தனியாக என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. புகார் கொடுத்ததாகச்சொன்னார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.